**பவானி நகராட்சி 24.08.2023-ம் தேதி திங்கட்கிழமை நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள் எண்:1**

பவானி நகராட்சிக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2023-2024-ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்பு எண்:13ன்படி பவானி நகரில் புதிய தினசரி சந்தை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்படி சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்பை நிறைவேற்றும் பொருட்டு பவானி நகர் பகுதியில் புதிய தினசரி சந்தை கட்ட மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு:** மன்றத்தின் அனுமதி பெற்று 2023-2024-ம் ஆண்டு சட்டமன்ற கூட்டதொடர் அறிவிப்பு எண்:13ன்படி பவானி நகரில் புதிய தினசரி சந்தை அமைக்க அரசிற்கு உரிய கருத்துரு சமர்பிக்க பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>மன்றத்தீர்மான எண் : 54</u>**

பவானி நகராட்சி வார்டு எண் 15, வார்டு சி, பிளாக் 12 நகர அளவை புல எண் 117 வாரச்சந்தை ரோட்டில் செயல்படடு வரும் தினசரி சந்தை இடத்திலே ய புதிய தினசரி சந்தை கட்ட இந் நகர்மன்ற உறுப்பினர்கள் 27பேரில் இன்று நடைபெற்ற கூட்டத்திற்கு வருகை புரிந்த 25 நகர்மன்ற உறுப்பினர்களுடன் குரல் வாக்கெடுப்பு மூலம் ஆதரவு / ஆதரவின்மை தெரிவிக்க கோரியதில், வார்டு எண். 1,3,5,6,7,9,13,16,17,19,21,22,23,24,25 மற்றும் 26 ஆகிய 16 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தும், வார்டு எண்.4,8,10,11,14,15,18 மற்றும் 20 ஆகிய 8 உறுப்பினர்கள் ஆதரவின்மையினை தெரிவித்தும், 27வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் நடுநிலை வகிப்பதாக தெரிவித்தார்.

இதில் பெரும்பான்மை, 16 நகர்மன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால் தற்போது வார்டு எண் 15, வார்டு சி, பிளாக் 12 நகர அளவை புல எண் 117 வாரச்சந்தை ரோட்டில் செயல்பட்டு வரும் தினசரி சந்தை இடத்திலேயே புதிய தினசரி சந்தை கட்ட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்).E.சிந்தூரி.

தலைவர்,

பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்
பவானி நகராட்சி.